# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106
தொலைபேசி எண்: 2363 5011 நிகரி : 2363 8282, 2363 8283
மின்னஞ்சல் - tnsec.tn@nic.in இணையதளம் - www.tnsec.tn.nic.in

## செய்தி வெளியீடு

செய்தி வெளியீடு : 10 / 2022 நாள்: 27.01.2022

**தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் அவர்கள் தலைமையில், தேர்தல் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி, நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் நடவடிக்கை மேற்கொள்வது குறிந்து ஆய்வுக்கூட்டம் இன்று (27.1.2022) பிற்பகல் காணொலிக் காட்சி வாயிலாக நடைபெற்றது.**

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்தல் அட்டவணையின்படி, மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆகியவற்றிற்கு நடத்தப்பெறவுள்ள தேர்தல் ஆயத்தப்பணிகள், கோவிட்-19 வழிமுறைகளை பின்பற்றுவது உள்ளிட்ட பணிகள் குறித்து கலந்தாய்வுக் கூட்டம் காணொலிக் காட்சி வாயிலாக (Video Conferencing) தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் முனைவர் வெ. பழனிகுமார் இ.ஆ.ப., (ஓய்வு) அவர்கள் தலைமையிலும், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய செயலாளர் திருமதி. எ.சுந்தரவல்லி இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையிலும் அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்கள் / மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்களுடன் இன்று (27.1.2022) நடைபெற்றது.

இக்காணொலி ஆய்வுக்கூட்டத்தில், நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலை அமைதியாக நடத்துவதற்கு கீழ்க்கண்ட பொருள்கள் குறித்து விவாதிக்கப்பட்டு அறிவுரைகள் வழங்கப்பட்டன.

மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத்துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில், கோவிட்-19 வழிகாட்டு நெறிமுறைகளை அனைத்து நிலைகளிலும் தவறாது கடைபிடித்து பின்பற்றிடுமாறு அறிவுரை வழங்கினார்.

..2..

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் அவர்கள், மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற 25.1.2022 தேதிய தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி, கோவிட் - 19 தொற்று வழிகாட்டி நெறிமுறைகள், இவ்வாணைய சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள அறிவுரைகளை தவறாது பின்பற்றிடுமாறு கேட்டுக் கொண்டார்.

வேட்பு மனு தாக்கல் செய்ய வரும் வேட்பாளர் மற்றும் உடன் வருபவர்கள் முகக்கவசம் அணிந்து, வெப்பமானி பரிசோதனை செய்து சமூக இடைவெளி கடைப்பிடிப்பதை கண்காணித்திடவும் தெரிவிக்கப்பட்டது. மேலும், நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல்களை அமைதியாக நடத்துவதற்கு தேவையான ஒத்துழைப்பையும், பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் காவல்துறை அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டன.

மேலும், தேர்தல் பணிகளின்போது அனைத்து மாவட்டங்களிலும் தேர்தல் நடத்தை விதிகளை (Model Code of Conduct) தவறாது கடைப்பிடித்திட தெரிவிக்கப்பட்டது. தேர்தல் நடத்தும் அலுவலர்/உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் அறைகளில் CCTV பொருத்தப்பட்ட விபரங்கள் குறித்தும், வேட்பு மனுக்கள் பெறப்பட்ட பின்னர், இணையதளத்தில் பதிவுகள் மேற்கொண்டிடவும் விரிவாக அறிவுரைகள் வழங்கப்பட்டன.

இக்கூட்டத்தில், பேரூராட்சிகளின் ஆணையர் டாக்டர் ஆர். செல்வராஜ், இ.ஆ.ப., நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் திரு பா. பொன்னையா, இ.ஆ.ப., கூடுதல் காவல்துறை இயக்குநர் (தலைமையிடம்) திரு. ஜி. வெங்கட்ராமன் இ.கா.ப, முதன்மை தேர்தல் அலுவலர் (நகராட்சிகள்) திருமதி. கு. தனலட்சுமி, முதன்மை தேர்தல் அலுவலர் (ஊராட்சிகள்) திரு. கி. அ. சுப்பிரமணியம், உதவி ஆணையர் (தேர்தல்) திரு. அகஸ்ரீ சம்பத்குமார், மற்றும் ஆணையத்தின் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

(தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய ஆணைப்படி)

27/1/2022

மக்கள் தொடர்பு அலுவலர்